## TNUSRB PC Exam: Test Yourself | பொதுத்தமிழ் வினா – விடை!! Day 7!!!

Q.1)Opt: d

**வினையாலணையும் பெயர்**

ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும். அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும்.

(எ.கா)வெல்- வென்றவன்

Q.2)Opt: b

- பசிப்பிணி போக்கிய பாவை மணிமேகலை.
- பசிப்பிணி தீர்க்கும் பாங்குடைய அறத்தைச் செய்கிறாய்.

Q.3)Opt: c

- எச்.ஏ.கிருட்டிணப் பிள்ளை திருநெல்வேலி ரெட்டியார்பட்டியில் வைணவ வளோளர் மரபில் தோன்றி, கிறித்தவராக மாறியவர்.
- இவரைக் கிறித்தவக் கம்பன் என்று அழைப்பார்கள்.
- இவரது நூல் கிறித்தவர்களின் தேவாரம் என்று போற்றப்படும் இரட்சண்ய மனோகரம் என்பதாகும்.

Q.4)Opt: d

- காமராசர் எளிமைக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவர். இவரை, தென்னாட்டு காந்தி, படிக்காத மேதை, அரசரை உருவாக்குபவர், பெருந்தலைவர் என்றெல்லாம் புகழ்வர். இவர் "கருப்பு காந்தி" என்றும் அன்போடு அழைக்கப்படுகிறார்.

Q.5)Opt: a

**இடப்பெயர்**

ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்.

(எ.கா)உலகம்

Q.6)Opt: c

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்"

என்று திருக்குறளின் பெருமையை ஔவையார் போற்றுகிறார்.

Q.7)Opt: d

- கழங்கம்- கழங்கு, விளையாட்டுக் கருவி, அடையாளம்
- களங்கம்- குற்றம், அழுக்கு

Q.8)Opt: a

சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் சண்முகசுந்தரம்.

Q.9)Opt: d

கலன் – யாழ்;

Q.10)opt: b

**செயப்படுபொருள்**

ஒரு தொடரில் யாரை, எதனை, எவற்றை என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே செயப்படுபொருள்

எடுத்துக்காட்டு : தென்றல் நடனம் ஆடினாள்

Q.11)Opt: b

- "இளங்கோவின் காவியப் பெண்மணி கண்ணகி"
- விடைக்கேற்ற வினா; இளங்கோவின் காவியப் பெண்மணி யார்?

Q.12)Opt: b

1.cabinet-அமைச்சரவை
2.cultural values-பண்பாட்டு விழுமியம்
3.Earthworm-நாங்கூழ்ப் புழு
4.Awareness-விழிப்புணர்வு

Q.13)Opt: b

- தமிழ் நாட்டின் தென் பகுதியே, மனிதத் தோற்றத்தின் முதலிடமாய் இருக்க வேண்டும் என்பர்.
- இப்பகுதியை 'லெமூரியா' என்று வழங்குவர்.
- அறிஞர் ஸ்காட்டு எலியட்டு 'இழந்த லெமூரியா' என்னும் தம் நூலிலே, லெமூரியாக் கண்டமே 'மனித நாகரிகத்தின் தொட்டில்'என்று கூறியுள்ளார்.

Q.14)Opt: a

**உரன்** – வலிமை;

Q.15)Opt: b

**ஓர்மின்** – ஏவல் பன்மை வினைமுற்று;

Q.16)Opt: a

**5. வினையெச்சத்தொடர்**

முற்றுப் பெறாத வினை, வினைச்சொல்லைக் கொண்டு முடிவது வினையெச்சத்தொடர் ஆகும்.

(எ.கா)தொழு- தொழுது

Q.17)Opt: c

சங்க இலக்கியமான கலித்தொகையில், ஏறு தழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. முல்லைநில ஆயர்கள் பங்கேற்கும் இந்நிகழ்வு, அவர்களின் வீரத்தினை மெய்ப்பிக்கக்கூடிய ஒன்றாகத் திகழ்கிறது.

*எழுந்தது துகள்,*
*ஏற்றனர் மார்பு*
*கவிழ்ந்தன மருப்பு,*
*கலங்கினர் பலர்*

49F7TT

*(கலி – 102: அடி 21–24)*

Q.18)Opt: b

- பிப்ரவரி 17 மற்றும் 18, 1929 அன்று செங்கல்பட்டில் நடைபெற்ற பெரியாரின் சுயமரியாதை மாநாடு பெண்களின் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதற்கான ஒரு முக்கிய நிகழ்வாகும்.

Q.19)Opt: a

| ஐவகை நிலங்கள் | |
|---|---|
| குறிஞ்சி | மலையும் மலைசார்ந்த இடமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் |
| நெய்தல் | கடலும் கடல்சார்ந்த இடமும் |
| பாலை | சுரமும் சுரம் சார்ந்த இடமும். |

Q.20) Opt: c

- இவற்றுள் சரியான சொற்றொடர்- இராமன் காட்டிற்குச் சென்று பழங்களைப் பறித்தான்